1979 பிப்ரவரி 22]

ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரிகள்.

*வினா எண் 137-அ.— திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு முதல் அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு அரசில் பணிபுரியும் ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி. எஸ். அதிகாரிகள் மொத்தம் எத்தனை பேர் ?

(ஆ) இவர்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் எத்தனை பேர் ?

(இ) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே,

(அ) தமிழ்நாடு அரசில் தற்பொழுது 245 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், 100 ஐ.பி.எஸ். அதிகாரிகளும் உள்ளனர்.

(ஆ) அகில இந்திய ரீதியில் இவர்கள் நியமனம் செய்யப் படுவதால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென்று பதவி ஒதுக்கீடுகள் கிடையாது. ஆகவே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரி களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பற்றிய தகவல் இல்லை.

(இ) தமிழ்நாடு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் 29 அதிகாரிகள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், 4 அதிகாரிகள் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

ஐ.பி.எஸ். அதிகாரிகளில், 13 அதிகாரிகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும், 1 அதிகாரி பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவராகவும் உள்ளனர்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, ஐ.பி.எஸ். அதிகாரி களில் தமிழ் தெரியாத அதிகாரிகள் உண்டா என்பதை அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, பொதுவாக ஐ.பி.எஸ். அதிகாரி என்றாலும், ஐ.ஏ.எஸ். அதிகாரி என்றாலும், அகில இந்திய அளவிற்கு அவர்கள் ரெக்ரூட் செய்யப் படுவதாலும், 50 சதவீதத்தை அந்தந்த மாநிலங்களுக்கு அவர்கள் அனுப்பிவிட்டு, பிற மாநிலங்களுக்கு 50 சதவீத அதிகாரிகளை அனுப்புவது வாடிக்கை. அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் வேறு பல மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இங்கே இடம்பெற்றிருக்கிறார்கள்.

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களைப் பற்றிய சட்டநாதன் பரிந்துரையை மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசு அனுப்பியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவைரவர்களே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு என்று அவர்கள் ஒதுக்கீடு செய்வதில்லை. பொதுவாக அவர்கள் ஒதுக்கீடு செய்வது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள் இவர்களுக்குத்தான்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் ஆகியவர்களில் தாய்மார்கள், அதாவது பெண்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, மொத்தமாக 245 அதிகாரிகள் என்று குறிப்பிட்டேன். அதிலே ஆடவர், பெண்டிர் எத்தனை பேர் என்பதற்குக் கிட்டப்பா அவர்கள் தனிக்கேள்வி போடக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி சண்முகம் : தலைவரவர்களே, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் தமிழ் நாட்டிலே பொறுப் பேற்றவுடன் கட்டாயம் தமிழ் கற்க வேண்டுமென்று இந்த அரசு பின்பற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, இந்த அரசு கற்றுக் கொடுக்க முடியாது. ஆனால், தமிழ் தாய்மொழி அல்லாதவர்கள் தமிழில் தேர்ச்சி பெறுவதற்காக முதல் ஆறு மாதத்திற்கு மாதம்தோறும் ரூ. 50/- தமிழ் ஆசிரியர் ஒருவர் வைத்துத் தமிழ் கற்றுக்கொள்வதற்காக உதவிப் பணமாகத் தரமபடுகிறது. அவர்கள் தமிழில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழு நடத்தும் தமிழ்மொழிப் பரீட்சைகளையும் பாஸ் செய்ய வேண்டுமென்ற நியதியும் உள்ளது. அகில இந்திய சர்வீஸ் என்ற காரணத்தினால் இங்கேயிருந்து போகிறவர்கள், அசாமிற்குப் போனாலும் சரி, மராட்டியத் திற்குப் போனாலும் சரி, ஒரிசாவிற்குப் போனாலும் சரி, அவர்கள் அந்தந்த மொழிகளைக் கற்க வேண்டியிருக்கும். பொதுவாக, அங்கு செல்கின்ற அதிகாரிகள் அந்தந்த மொழி களைக் கற்றுக் கொள்வது இயற்கை. இங்கேயும் வட நாட்டி லிருந்து வந்த பல அதிகாரிகள் முடிந்தவரை தமிழ் கற்றுப் பேசுகிறார்கள் என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 137-ஆ வினாவையும் இதோடு ஒட்டி எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

*வினா எண் 137-ஆ.— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1977–78 ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். பரிட்சைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே,

1977–78 ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். பரிட்சைகளில் தேர்தெடுக்கப்பட்டவர்களுள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கை முறையே 15ம், 4-ம் ஆகும்.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்படக்கூடிய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் தேர்வில் வெற்றி பெறுவதற்காகப் தமிழ்நாடு அரசால் பயிற்சி வகுப்புகள் கூட நடத்தப்படுகிறது. அப்படியும் இந்த எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அதற்கான காரணத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, அதற்குக் காரணம் எனக்குத் தெரியாது.

[முற்பகல் 9-10].

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, 1977–78ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பதவிகளுக்குத் தமிழ்நாட்டில் தேர்வு பெற்றவர்கள் 15 பேர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது கடந்த ஆண்டில் இருந்ததை விடகுறைவா, அதிகமா ? குறைவு என்றால் அதற்குக் காரணம் என்ன? குறைவை நிவர்த்திக்க இந்த அரசு ஏதாவது விசேஷ முயற்சி எடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் ஏற்கனவே தெரிவித்தேன், ஏன் குறைகிறது என்பதைப் பற்றிக் காரணம் எனக்குத் தெரியாது, என்று. ஆனால் 1977–78 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள், தாழ்த்தப்பட்டவர்கள் உள்பட, தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 15 பேர்.